செய்தி வெளியீடு எண் : 186 நாள் : 27.01.2023

# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம்சென்னகிரி ஊராட்சியில் ஊரக விளையாட்டு , மையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்கள்.

---

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில் சேலம் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை சேலம், மாசிநாயக்கன்பட்டியில் இன்று (27.01.2023) தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

சேலம் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு மாவட்ட அளவில் 42 வகையானப் போட்டிகளும், மண்டல அளவில் 8 வகையானப்போட்டிகளும் என 50 வகையான போட்டிகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்றைய தினம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை சேலம், மாசிநாயக்கன்பட்டியில் தொடங்கி வைத்தார்கள். இப்போட்டியில் கபடி, சிலம்பம், தடகளம், கூடைப்பந்து, இறகுப்பந்து, கையுந்துப்பந்து, கிரிக்கெட், கால்பந்து, மேசைப்பந்து, டென்னிஸ், பளுத்தூக்குதல், செஸ் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மாவட்ட மற்றும் மண்டல அளவில் நடத்தப்படுகிறது. முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு **இதுவரை பதிவு செய்துள்ளவர்களில் சேலம் மாவட்டத்தில் 36,629 நபர்கள் பதிவு செய்து தமிழ்நாடு அளவில் முதலிடத்தில் உள்ளது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு இளைஞர்கள் மனதளவிலும், உடல் அளவிலும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் அனைத்து பகுதிகளிலும் தேவையான விளையாட்டு மைதானங்கள் உருவாக்கித்தரப்படும் என அறிவித்துள்ளார்கள்.

அந்தவகையில், விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், அதற்கான பயிற்சிகளை வழங்குவற்கும் தேவையான கட்டமைப்புகள் ஏற்படுத்தித்தரப்படும். சேலம் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் விளையாட்டுகளை ஊக்குவிக்கும்

பொருட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் 385 ஊராட்சிகளிலும் ஒவ்வொரு விளையாட்டு மைதானம் அமைக்கப்படும். மேலும் ஒவ்வொரு மைதானத்திலும் குறைந்தது 2 முதல் 7 விளையாட்டுகள் வரை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக சேலம் மாவட்டத்தில் 20 ஊராட்சி ஒன்றியங்களில் 124 விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊரக விளையாட்டு மைதானத்தில் கைப்பந்து, கால்பந்து, ஹாக்கி, கூடைப்பந்து, கபடி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் விளையாடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சிறியவர் முதல் பெரியவர் வரை பயன்படுத்தும் வகையில் நடைபாதைகளும் அமைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று காலை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் அவர்கள் முன்னிலையில், சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், சென்னகிரி ஊராட்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள ஊரக விளையாட்டு மையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வுகளின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா,இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் தா.ப. கார்த்திக்கேயன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம்,இ.ஆ.ப., சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.பார்த்திபன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.இராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.சீ.பாலசந்தர், இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சங்கீத் பல்வந் வாகி,இ.ஆ.ப., முன்னாள் அமைச்சர் திரு.டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.சிவலிங்கம் உட்பட தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in